ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2322/37 - 2023 මාර්තු මස 08 වැනි බදාදා - 2023.03.08

*2322/37 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வாக்கெடுப்பு தொடர்பான அறிவித்தல்**

*உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 38(3) உட்பிரிவின் பிரகாரம் அறிவித்தல்*

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தன் (திருத்தப்பட்டவாறான) 38(1) (இ) ஆம் உட்பிரிவின் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட 2317/11 ஆம் இலக்க மற்றும் 2023.01.30 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி நடாத்தப்படமாட்டாதெனவும்,

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட எதிர்பாராததும் தவிர்க்க முடியாததுமான நிகழ்வு காரணமாக இத்தேர்தல் தினத்தை ஒத்தி வைக்க வேண்டிய வந்துள்ளதென தேர்தல் ஆணைக்குழுவை உசாவியதன் பின்னர் அவ்வாணைக் குழுவினால் எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதெனவும்,

அவ்வுள்ளூர் அதிகார சபைகளோடு தொடர்புடைய புதிய தேர்தல் தினமாக 2023, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி என்னால் இத்தால் விதிக்கப்படுகின்றதெனவும்,

1A - G 39055 — 31 (2023/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 38(1)(இ) ஆம் உட்பிரிவோடு வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அம்பலவாணர் சிவபாலசுந்தரன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்,
2023, மாச்சு 08.

**அட்டவணை**

யாழ்ப்பாணம் மாநகர சபை
வல்வெட்டித்துறை நகர சபை
பருத்தித்துறை நகர சபை
சாவகச்சேரி நகர சபை
காரைநகர் பிரதேச சபை
ஊர்காவற்றுறை பிரதேச சபை
நெடுந்தீவு பிரதேச சபை
வேலணை பிரதேச சபை
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை
வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை
வலிகாமம் தெற்குப் பிரதேச சபை
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை
வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
பருத்தித்துறை பிரதேச சபை
சாவகச்சேரி பிரதேச சபை
நல்லூர் பிரதேச சபை

EOG 03 - 0095

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.